

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP),நாமக்கல்

சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பொட்டணம் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண்.216/4 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

அளவு : 1:800 (அ) 1"=66'0"

இணையதள விண்ணப்ப எண் : PFCQ67YW / 50184 /2025

I குறிப்பு :

(i) மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 1.94 ஏக்கர் (அ) 7850.00 ச.மீ
(ii) சாலை மற்றும் மூலை மடக்குகளின் மொத்தப்பரப்பு : 3465.44 ச.மீ
(iii) மனைப்பிரிவு எல்லை ------------------------
(iv) உத்தேச சாலை ------------------------
(v) நிலையில் உள்ள சாலை ------------------------
(vi) கோரிய மனைகள் : 43
(vii) ஒதுக்கிய மனைகள் : 41
(viii) ஒப்படைக்கப்பட்ட மின்பகிர்மானம் மனையின் பரப்பு (HAND OVER TO BE TANGEDCO) : 24.19 ச.மீ (0.59%)
(ix) ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு மனையின் பரப்பு (HAND OVER TO BE LOCAL BODY) : 25.02 ச.மீ (0.61%)

II பொது ஒதுக்கீடுகள் :

உள்ளாட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது..

சாலை மற்றும் மூலை மடக்குகளின் மொத்தப்பரப்பு : 3465.44 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட மின்பகிர்மானம் மனையின் பரப்பு (HAND OVER TO BE TANGEDCO) : 24.19 ச.மீ (0.59%)

ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு மனையின் பரப்பு (HAND OVER TO BE LOCAL BODY) : 25.02 ச.மீ (0.61%)

மூலை மடக்கு : 12.0மீ சாலை வரை 1.52மீx1.52மீ

III நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
2. அரசாணை எண்.181-ன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள் 19.12.2020, வழிகாட்டி மதிப்பின்படி தொகையை செலுத்தப்பட வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர், அவர்களால் இரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில்(கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எந்தவித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'X4' அளவிலான தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கதல்ல.
8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவின் ஊடே HT Line, LT Line and Telephone Line செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
12. உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் (ம) மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
13. அரசாணை எண்18.16 ந.நி. (ம) கு.வ.துறை, நாள்:04.12.2019 (ம) 31.01.2020-ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்.

Approval No:SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO. 230/2025

ிருமதி.தே.புவனேஸ்வரி
ளவர்/உதவி வரைவாளர்

திருமதி.செ.சந்தியா
வரைவாளர் நிலை-III

திருமதி.பொ.யமுனாதேவி
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-II

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.

Signature valid
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2025.09.16 16:15:53

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Namakkal
Date:2025.12.29 11:[illegible]:10